# <u>பத்திரிக்கைச் செய்தி</u>

குழந்தைகள் நலன் மற்றும் சிறப்புச் சேவைகள் துறையின் கீழ் செயல்பட்டுவரும் ஈரோடு மாவட்ட இளைஞர் நீதிக் குழுமத்தில் கீழ்க்காணும் பணியிடங்கள் ஒப்பந்த அடிப்படையில் நிரப்பப்பட உள்ளதால், அதற்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

| வ. எண் | பணியிடம் மற்றும் ஊதியம் | காலிப்பணியிட எண்ணிக்கை | கல்வித் தகுதி | வயது |
|---|---|---|---|---|
| 1. | **இளநிலை உதவியாளருடனிணைந்த பதிவறை எழுத்தர்** (தொகுப்பூதியம் ரூ. 20,000/ ஒரு மாதத்திற்கு) | 1 | 10–ஆம் வகுப்பு அல்லது அதற்கு இணையான தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். | 42 வயதிற்கு மேற்பட்டவர்களாக இருத்தல் கூடாது. |
| 2. | **அலுவலக உதவியாளர்** (தொகுப்பூதியம் ரூ. 13,000/ ஒரு மாதத்திற்கு) | 1 | 8–ஆம் வகுப்பு அல்லது அதற்கு இணையான தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். | 42 வயதிற்கு மேற்பட்டவர்களாக இருத்தல் கூடாது |

- இதற்கான விண்ணப்பப் படிவங்கள் மற்றும் தேவையான தகுதி விவரங்களை erode.nic.in என்ற இணையதளத்தில் பதிவிறக்கம் (Download) செய்து கொள்ளலாம்.
- தகுதி வாய்ந்த நபர்கள் மேற்கண்ட பதவிக்கு அதற்கான அமைந்த படிவத்தில் புகைப்படம் மற்றும் சான்றிதழ்கள் இணைத்து 08.10.2026 அன்று மாலை 5.00 மணிக்குள் கீழ்க்கண்ட முகவரியில் கிடைக்கப்பெறுமாறு விண்ணப்பிக்கலாம்.

மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலுவலர்,
மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகு,
மாவட்ட ஆட்சியரகக் கூடுதல் கட்டிடம் – 6வது தளம்,
ஈரோடு மாவட்டம் – 638011.

- முறையாகப் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் மற்றும் குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் மேற்குறிப்பிட்ட அலுவலகத்திற்கு வந்து சேராத விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படாது. தகுதி மற்றும் அனுபவத்தின் அடிப்படையில் நியமனம் அமையும். இது குறித்து அரசின் முடிவே இறுதியானது.